**கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டம் - 2019**

கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் (ஏஜஜபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய எல்0081ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர்வழங்கல், மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு, நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாகவுள்ளன. ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் முறைமை முன்னேற்றங்களுடன் வருமானம் குறைந்த சமூகங்களின் வீடமைப்பு நிலைமைகளை உயர்த்துதல், இயலுமானவகையிலான வீடமைப்பு மற்றும் காணியினை மீள்அபிவிருத்தி செய்தல் போன்றவற்றில் முதலீடுவதனூடாக கொழும்பில் காணிப்பயன்பாட்டின் வினைத்திறனை உயர்த்துதல் போன்றன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 50,460 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 287 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 35,163.7 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் (ஏஜஜபீ) நிதியளிக்க இணங்கப்பட்டதுடன் அதில் ரூபா 14,417.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 82 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட இணங்கப்பட்டதுடன் அதில் ரூபா 879.1 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் தனியார் பங்காளரால் நிதியளிக்கப்பட இணங்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 யூலை 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்படவேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

- என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்கீட்டு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| வெளிநாட்டுக்கடன் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் செலவின் பயன்பாட்டிற்காக முறையே ரூபா 1,285 மில்லியன் மற்றும் ரூபா 310 மில்லியன் தொகையான பாதீட்டு ஒதுக்கீடு 2019 இல் பொதுதிறைசேரியால் வழங்கப்பட்டிருந்தது. எனினும், மொத்த ஒதுக்கீட்டுத் தொகையில் முறையே வெளிநாட்டுக்கடனின் ரூபா 87.91 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ரூபா 51.32 மில்லியன் மாத்திரம் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் மந்தமான செயன்முறையால் மீளாய்வாண்டின் போது முறையே வெளிநாட்டுக்கடனின் 93.15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,197.09 மில்லியன் மற்றும் 83.44 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இலங்கை அரசாங்கத்தின் ரூபா 258.68 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் நிர்மாண தாமதத்தால் இவ்வாறு ஏற்பட சாத்தியம் உள்ளது. | இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் (ஏஜஜபீ) இடையிலான கடன் உடன்படிக்கை 2019 ஏப்ரல் 25 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதும், கடன் வினைத்திறனான திகதி 2019 யூலை 25 ஆகவிருந்தது. ஆகையால், அந்தக்காலப்பகுதியின் போது செயற்திட்ட உத்தியோகத்தரை வேலைக்கமர்த்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்தது. அதற்கு மேலதிகமாக, செயற்திட்டமானது செயற்திட்டத்தின் உப கூறுகளின் ஆரம்ப நடவடிக்கைகளை செயற்திட்டம் தொடங்கியிருந்தது. ஆரம்ப பெறுகை செயன்முறைக்குரிய இந்த உபநடவடிக்கைகளில் அதிகளவானவை அதிக செலவீனத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை கருத்திற்கொள்வதன் மூலம் அடையக்கூடிய இலக்குகள் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க ஒதுக்கீடு வேண்டப்பட வேண்டும். |

**3. மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்**

| | கணக்கீட்டு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக 91 உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து 2019 சனவரி 31 இல் பதவியணி அங்கீகாரத்தை பெற்றிருந்தது. எனினும், 2020 யூலை வரையிலும் 19 உத்தியோகத்தர்கள் மாத்திரம் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். | இது செயற்திட்ட நடவடிக்கைகளின் சாதகமான காலதாமதத்திற்கு தாக்கமளிக்கும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் பீஎம்யூ உத்தியோகத்தர்களிற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதிலும் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் மற்றும் கொவிட் 19 இனால் தாமதமாக்கப்பட்டது. தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தல்கள் திறைசேரி செயலாளராக பிரசுரிக்கப்பட்ட சுற்றறிக்கையினால் ஆட்சேர்ப்புக்கள் தாமதமாக்கப்பட்டது. மேலும், திறைசேரி செயலாளரால் மேலும் அறிவுறுத்தல்கள் விநியோகிக்கும் வரை உரிய முகவராண்மைக்கு அப்பால் ஆட்சேர்ப்பை தடுப்பதற்கு மேலதிக அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளை தொடங்குவதற்கு செயற்திட்டத்திற்காக தகுதிவாய்ந்த பதவியணிகளை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | முக்கியமான மற்றும் திடமான வேலைகளிற்கான சில வெற்றிடங்களிற்கு வேலைக்கமர்த்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அத்தகைய பதவிகளின் வெற்றிடம் இருந்தமையாலும் செயற்திட்ட பதவியணியால் தலைமைதாங்க வேண்டிய அத்தகைய வேலைகள் வெளிமுகவராண்மையால் மற்றும் தனிப்பட்டவரால் ரூபா 1,853,300 கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சில செயற்திட்ட தகவலின் முக்கிய மற்றும் இரகசிய தகவல் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட ஆவணங்கள் மற்றும் வேலைகளின் இரகசியத்தன்மையை பேணுவதற்கு பீஎம்யூ இன் பொறுப்பின் உத்தியோகத்தரின் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் வெளித்தரப்பினரிடமிருந்து இந்த வகையான சேவைகள் பெறப்பட்டது. | தேவையான உத்தியோகத்தரை காலதாமதமில்லாமல் வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. |